## சுருக்கம்

அறிவிப்புகள் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.72,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

### பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந2(1))த்துறை

அரசாணை (நிலை) எண்.55

நாள் 03.11.2021

பிலவ, ஐப்பசி 17
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை :–

1 அரசாணை (நிலை) எண்.02, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 02.01.2018.
2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதம் எண்.அ3/3780/2021, நாள் 14.09.2021.

******

**ஆணை:**

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் "இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களுக்கான வருமான வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகள் ஆகியவற்றை பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு கிராமப்புறங்களில் ரூ.40,000/– மற்றும் நகர்புறங்களில் ரூ.60,000/– என்பதை கிராமப்புற மற்றும் நகர்புற பயனாளிகளுக்கு ரூ.72,000/– ஆக உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

3. 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த மின்மோட்டாருடன் கூடிய விலையில்லா தையல் இயந்திரம்,

விலையில்லா பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் விலையில்லா வீட்டுமனைப்பட்டா ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது எனவும் மேற்படி திட்டங்களுக்கான பயனாளிகளின் தற்போதைய ஆண்டு வருமான உச்சவரம்பான ரூ.72,000/–யினை ரூ.1,00,000/–ஆக உயர்த்தி ஆணை வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை ஆகியவற்றை பெறுவதற்கான கிராமப்புற மற்றும் நகர்புற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.72,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன், சென்னை– 5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை– 5.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில
நிர்வாக ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18. (பெயரில்).
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–5

<u>நகல்</u>:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (பி.மி.பி மற்றும் சிந)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/11/21

பிரிவு அலுவலர்

3/11/2021